1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தொட்டியில் குடிநீர் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்கென, பெரம்பலூர் பேரூராட்சியின் தீர்மானத்திற்கிணங்க, ஊராட்சியின் நிதியிலிருந்து 7.5 குதிரை சக்தி ஆயில் என்ஜின் ஒன்று ரூ. 8,195-க்கு இராஜாமணி ஏஜென்சீஸ் நிறுவனத்தாரிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது.

பழயாற்றின் குறுக்கே பாலம்

*199 வினா.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுக்கா, தாமரைகுளத்தையும், குந்துரும்பொத்தையையும் இணைக்கும் விதத்தில் பழயாற்றின் மீது ஒரு பாலம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் கிராமச்சாலைப் பணிகள்

*200 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், 1500 மக்கள் தொகையிருந்தும் இன்னும் கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படாத சாலைகள் எவை, எவை?

(இ) இவை எப்பொழுது கிராமச்சாலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) இந்தத் திட்டம் படிப்படியாக செயலாக்கப்படுகிறது. துவரை மூன்று படிவங்களுக்கான வேலைகளுக்கு அரசு ஒப்புதல் ளித்துள்ளது. எஞ்சியுள்ளவைகளுக்கு பின்வரும் படிவங்களில் புதல் அளிக்கப்பட வேண்டும். எல்லா வேலைகளையும் உடனே த்துச் செயலாக்க போதிய நிதி வசதி இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த விவரப் பட்டி ல் ஏறத்தாழ 17 சாலைகளை எடுத்துக்கொள்ளலாம் என்ற விவ தை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இதில் பாதி லைகளையாவது உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு ஏதுவான றையில் இந்த வேலைகளை ஃபேஸ்ட் புரோகிராமில் சேர்த்துக் ாள்ள அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பார் ா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த யோசனை கருத்திற் கொள்ளப்படும்.

Madurai Meenakshi Temple

* 201 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. e Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to illuminate Sri eenakshi Temple at Madurai with financial assistance from the rla Charity Trust, Calcutta; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மதுரை அருள்திரு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் காயிலிலுள்ள மின் இணைப்பு கம்பிகள் மிகவும் பழமையானவை. வை சேதமடைந்துள்ளன. மேற்படி மின் இணைப்புகளை சீர் ருத்தும் வேலைக்கு சுமார் ரூ. 3.5 இலட்சம் செலவு ஆகும் என திப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலையை உபயமாகச் செய்து கல்கத்தாவிலுள்ள பிர்லா தரும நிறுவனத்தினர் ஒப்புதல் ளித்துள்ளனர். பிர்லா தரும நிறுவனத்தின் மின் பொறியா